# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.19/2014

DW–2 சிவக்குமார் நாள்.08.10.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வடக்குமாதவி ரோட்டில் உள்ள வீட்டை என்பெயரில் கிரய ஆவணம் எழுதுவதற்கு ஏற்கனவே கடன் வாங்கிய கிரய தொகையை வாதி அங்காளம்மன் நகரில் உள்ள பிளாட்டுகளை விற்று அந்த கடனை செலுத்தினார் என்றால் சரியல்ல. நான் என்அப்பாவிடம் எல்லா சொத்துக்களையும் தானசெட்டில்மெண்டாக எழுதிகொடுக்கவேண்டுமென்று மிரட்டியதால் என் சகோதரிகளை வைத்து என்அப்பா வா.சா.ஆ.38 அறிவிப்பை அனுப்பினார் என்றால் சரியல்ல. அறிவிப்பு அனுப்பிய அதே வழக்கறிஞரை தான் என்அப்பா அவர் தரப்பு மற்றும் என்தரப்பு வழக்கறிஞராக நியமணம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். எங்கள் சமுதாயத்தில் சொத்து இருந்தால் தான் பெண் கொடுப்பார்கள் என்றால் சரிதான். நல்ல மனிதர் என்றாலும் பெண் கொடுப்போம். திருமணம் செய்துகொள்வதற்காக தனக்கு சொத்து எழுதி தருமாறு வாதி என்அப்பாவிடம் கேட்டதால் இருவருக்கும் மனவருத்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த மனவருத்ததில் தான் என்அப்பா என்னுடன் சேர்ந்துகொண்டார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் 27.03.2016ம் தேதி என்அப்பாவிடம் தாவா சொத்தை பொறுத்து தானசெட்டில்மெண்ட் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அதன்பின்னர் 07.04.2014, 25.11.2014 ம் தேதி தாவா சொத்துக்களை என்அப்பாவிடம் இருந்து கிரய பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் என்அப்பா தான் பாகம் பிரித்து கொடுத்துவிட்டேன் என்றும், கடன் உள்ளதால் கிரய பத்திரம் எழுதி கொடுக்கும்படி சொன்னார். நானும், வாதியும் பாகம் செய்துகொண்டதாக என்அப்பா சொன்னார். என்அப்பா பெயரில் உள்ள சொத்துக்களை பாகம் செய்துகொண்டதாக சொன்னார். என்பாக சொத்திற்கு பத்திரம் எழுதிகொடுத்தது போன்று வாதி பெயருக்கு என்ன ஆவணம்

எழுதிகொடுக்கப்பட்டது என்றால் அவருக்கு சொத்துக்கள் உள்ளது, என்அப்பா பெயரில் உள்ளது, அவர் எழுதி கொள்ள சொன்னதில் அவர் எழுதவில்லை. பங்கு சரிசமமாக பிரித்து கொள்ளபட்டதா என்றால் வாதிக்கு ஒரு ஏக்கர் அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஊரில் பஞ்சாயத்து பேசினோம். அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் அக்ரிமெண்ட் உள்ளது. நான் கூறுவது போன்று அக்ரிமெண்ட் அடிப்படையில் பஞ்சாயத்து நடக்கவில்லை என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் ஊரில் பெரியவர்களை வைத்து பஞ்சாயத்து நடந்தது என்றும், அதில் கிராமத்தில் உள்ள சொத்துக்களை வாதி எடுத்துகொள்ளசொல்லியும், பெரம்பலூரில் உள்ள சொத்துக்களை என்னை எடுத்துகொள்ள சொன்னார்கள் என்றும், வாதி எல்லா சொத்துக்களிலும் எனக்கு பாதி பங்கு வேண்டும் என்று கேட்டதால் பஞ்சாயத்து முடிவுக்கு வரவில்லை என்றும், அதனால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. கூட்டுறவு வங்கியில் என்அப்பாவுக்கும், வாதிக்கும் கூட்டாக கணக்கு இருந்ததா என்றால் இருந்திருக்கலாம். அந்த வங்கியில் லாக்கர் இருந்ததா என்றால் இருந்தது. என்அப்பாவிடம் சொல்லி நான் ஓப்பன் செய்ய சொன்னேன். வாதி பெயரில் லாக்கர் ஓப்பன் செய்யப்பட்டு அதை வாதி பயன்படுத்தி வந்தார் என்றால் சரியல்ல. அப்பா பெயரில் லாக்கர் இருந்தது. என்அப்பா பொறுப்பற்ற முறையில் குடும்பத்தை கவனிக்காமல் இருந்ததால் வாதி குடும்பத்தை நிர்வாகம் செய்துவந்தார் என்றும், அதனால் தான் வாதி பெயரில் வரவு செலவு கணக்கு இருந்தது என்றால் சரியல்ல. வாதி நவதானியங்களை கொள்முதல் செய்து மொத்த வியாபாரம் செய்துவந்தார் என்றால் நான் வெளிநாட்டில் இருந்ததால் விவசாயம் செய்தது தெரியும். வியாபாரம் செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. நவதானிய வியாபாரம் மூலம் கிடைத்த பணத்தை வாதி சொத்து வாங்குவதில் முதலீடு செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் படிப்பதற்கும், வெளிநாடு செல்வதற்கும் வேண்டிய செலவுகளை வாதி தான் செலவு செய்தார் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் வேலை செய்த கம்பெனி விவரம் மற்றும் வருமான விவரத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் NRI Account தாக்கல் செய்துள்ளேன். சம்பள பட்டியல் தாக்கல் செய்யவில்லை. எனக்கு நிரந்தரமான போதிய வருமான இல்லையென்றும், நான் வீட்டிற்கு பணம் அனுப்பியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்மனைவியின் வீடு நல்ல வசதி உள்ள குடும்பம் கிடையாது என்றும், சுமாரான வசதி உள்ள குடும்பம் என்றால் வீடு, தோட்டம் அவர்கள் குடும்பத்தில் இருந்தது. தோட்டத்தை விற்றுவிட்டார்கள். என்மனைவி வெளிநாட்டில் CMC மருத்துவமனையில் பணிபுரிந்தார். என்மனைவியின் சம்பள பட்டியலை நான் தாக்கல் செய்யவில்லை. பஞ்சாயத்து முச்சலிக்காவை நான் எதிர்வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 29.01.2015ம் தேதியிட்ட முச்சலிக்கா மூலம் இந்த வழக்கு தாக்கல் செய்தபின்னர் நடைபெற்ற பஞ்சாயத்து ஆகும். அந்த பஞ்சாயத்தில் பேசியபடி நான் நடந்துகொள்ளவில்லை என்றால் நான் என்அப்பாவிடம் கிரையபத்திரம் எழுதிவாங்கிகொண்டேன். அவருக்கு ஜீவனாம்சமாக பணமும் கொடுத்தேன். கிரய பத்திரத்தை பஞ்சாயத்து முச்சலிக்காவிற்கு முன்பு நான் எழுதிவாங்கிகொண்டேன் என்றால் சரிதான். பேச்சுவார்த்தை படி எழுதிவாங்கிகொண்டேன். பஞ்சாயத்து முச்சலிக்காவில் குறிப்பிடபட்டுள்ள ரொக்க பணத்தை யார் கொடுக்கவேண்டுமென்று அதில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். சாட்சி தானாக தானும், வாதியும் அதை கொடுக்கவேண்டும் என்று கூறுகிறார். முச்சலிக்கா சரியாக முறைப்படி எழுததததால் தான் வாதி அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மேற்படி முச்சலிக்காவில் உள்ள விவரத்தை என்அப்பா ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என்அப்பாவிற்கு திருமணம் செய்துவைக்கவேண்டுமென்று எண்ணத்தில்தான் 1966ம் ஆண்டு பெயரளவிற்கு பி.வா.சா.ஆ.4 பாகப்பத்திரம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணம் பெயரளவில் ஏற்பட்ட ஆவணம் என்பதால் தான் சொத்துக்களை என்அப்பா , பெரியப்பா மற்றும் பாட்டி கூட்டாக அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த அடிப்படையில் தான்

3பேரும் சேர்ந்து நாச்சியம்மாளுக்கு 1968ம் ஆண்டு வேறு சொத்தை கிரயம் வாங்குவதற்காக கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நானும், வாதியும் முறையாக பாகப்பத்திரம் எழுதிகொள்ளவில்லை என்றால், வாய்மொழியாக பாகம் பேசி நான் எழுதிகொண்டேன். அவர் எழுதவில்லை. நான் பாகப்பத்திரம் எழுதவில்லை. கிரயபத்திரமாக எழுதியுள்ளேன். தாவா சொத்து ஏ மற்றும் பி அட்டவணை சொத்துகள் பொதுகுடும்ப சொத்துகள் வருமானம், வாதி விவசாயம் மற்றும் வியாபாரம் செய்து ஈட்டிய வருமானம் மற்றும் நான் வெளிநாடு சென்ற சம்பாதித்த பணத்தில் இருந்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் வெளிநாடு சென்று சம்பாதித்த பணத்தை வைத்து தான் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பொதுகுடும்ப சொத்துக்கள் என்பதால் அதில் வாதிக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் சமபங்கு உள்ளது என்றால் சரியல்ல. என்சகோதரி 2ம் பிரதிவாதி என்னுடன் 4 வருடங்கள் இருந்தார். அவருக்கு கொடுக்கவேண்டிய சம்பளத்தை யார்மூலம் அனுப்பி வைத்தேன் என்றால் அவர் கையில் தான் கொடுத்தேன். நான் அவர் கையில் கொடுக்கவில்லை என்றும், வாதி கணக்கிற்கு அனுப்பி அந்த பணத்தை வாதி தான் அவர் வீட்டில் கொடுத்தார் என்றால் சரியல்ல. வெளிநாட்டில் நான் இருக்கும்போது என்மூலியமாக அங்கு வேலைபார்த்த என் ஊர்பக்கம் சேர்ந்தவர்கள் பணம் அனுப்பியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என்அப்பா 13.12.2022ம் தேதி பஸ்டாண்ட் அருகில் மயங்கி விழுந்த பின்னர் அரசு மருத்துவமனையில் கொண்டு செல்லப்பட்ட பின்னர் தனலட்சுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 2 நாட்கள் கழித்து இறந்தார். அப்போது என்னுடைய அப்பா என் கட்டுப்பாட்டில் இருந்தார் என்றால் வாதியுடன் அவருக்கு சண்டை நான் பார்த்து கொண்டேன். அந்த சமயத்தில் நான் அவருடைய கணக்கில் இருந்து பணத்தை எடுத்துவிட்டேன் என்றும் , அதனால் தான் அவருக்கு வங்கி கணக்கில் பணம் இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. அவருக்கு Bank of India மற்றும் Union Bankல் கணக்கு இருந்தது. அவர் இறந்தபின்னர் நான் நாமினியாக

இருந்ததால் பணத்தை என்னிடம் கொடுத்தார்கள். என்அப்பா பெயரில் உள்ள லாக்கரை என்பெயருக்கு மாற்றம் செய்துகொண்டு அதில் உள்ள நகைகளை நான் எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. அரும்பாவூரில் உள்ள செல்வம் நகை கடையில் என்அப்பா பணம் கொடுத்து வைத்திருந்தார் என்றும், அதை அவர் இறந்த பின்னர் நான் வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் என்அப்பா பெயரில் இருந்த இ அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணத்தை பொறுத்து வாதி பாகம் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. என்அப்பா தனிப்பட்ட முறையில் அவர் கிரயம் வாங்குவதற்கு அவருக்கு வருமானம் கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்துகள் பொதுகுடும்ப சொத்துகள் என்பதால் வாதிக்கு அவர் கோரும் பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.